சிஜேபி இணை ஒருங்கிணைப்பாளர் இந்தியரா?

விசாரிக்கக் கோரிய மனுவுக்கு மத்திய அரசு பதிலளிக்க உத்தரவு



சௌரவ் தாஸ்

சென்னை, அக். 30: கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் சௌரவ் தாஸ் இந்தியரா என்பது குறித்து விசாரிக்க மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கில், மத்திய அரசு 6 வாரங்களுக்குள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜமீன் பல்லாவரத்தைச் சேர்ந்த கணேஷ்குமார் என்பவர் தாக்கல் செய்த மனுவில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (சிஜேபி) இணை ஒருங்கிணைப்பாளர் சௌரவ் தாஸ் இந்தியர்தானா என்பது குறித்து விசாரிக்க உள்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும்.

மத்திய அரசு நடத்தும் விசாரணையில் சௌரவ் தாஸ், நேபாளி என்பது தெரியவந்தால், அவருக்கு வழங்கப்பட்டுள்ள இந்திய கடவுச்சீட்டு, ஆதார் அட்டை உள்ளிட்டவற்றை ரத்து செய்ய வேண்டும். நீதித் துறை குறித்தும், குறிப்பாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறித்தும் அவதூறு கருத்துகளை எக்ஸ், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களில் பரப்பி வருகிறார். எனவே, அவருடைய சமூக வலைதளக் கணக்குகளை முடக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஜெகந்நாத், இதுதொடர்பாக மத்திய அரசுக்கு புகார் அளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார். இதையடுத்து, இந்த மனுவுக்கு மத்திய அரசு 6 வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இந்தியா வல்லரசாக மாறுவதை தடுக்க முடியாது

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்

மதுரை, அக். 30: இந்தியா வல்லரசாக மாறுவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெள்ளிக்கிழமை மாலை தரிசனம் செய்தார்.

அதன் பிறகு, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தோர் இந்திய பிரதமர்களாக இருந்துள்ளனர். தற்போது பிரதமராக குஜராத்தைச் சேர்ந்த மோடி பதவி வகிக்கிறார். இதேபோல, இனி வரும் காலங்களில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமராக வர வாய்ப்பு உள்ளது.

தற்போதைய சூழலில் உலக நாடுகளுக்கு வழிகாட்டியாகவும், மனித இனத்தையே அரவணைத்துச் செல்லும் நாடாகவும் இந்தியா மாறும். இதுமட்டுமன்றி, பொருளாதார வளர்ச்சியில் 4-ஆவது இடத்தில் உள்ள நமது நாடு, முதல் இடத்தைப் பிடித்து வல்லரசாக மாறுவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்றார் அவர்.



மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் வெள்ளிக்கிழமை மாலை சுவாமி தரிசனம் செய்த பின்னர் வெளியே வந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன். உடன் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர், சமூக நலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி, கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் உள்ளிட்டோர்.

மின் தடை – அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்:

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் ஏற்பட்ட மின் தடை குறித்து எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:

குடியரசு துணைத் தலைவர் வருகையின் காரணமாக, பிற்பகல் 3.30 மணி முதல் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் முழுவதுமாக ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகள் முழுமையாக செய்யப்பட்டிருந்தன.

மேலும், உதவிக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவிப் பொறியாளர் கோயில் வளாகத்தில் உள்ள துணை மின் நிலையத்தில் பணியில் இருந்தார். தரிசனத்துக்குப் பிறகு, குடியரசு துணைத் தலைவர் கிழக்கு கோபுரத்தின் முன் செய்தியாளர்கள் சந்திப்பு நடத்தினார். அப்போது, கோயில் மின் நிலையத்தில் ஏற்பட்ட உள் கோளாறு காரணமாக மின் விநியோகம் தடைபட்டது. உடனடியாக 2 நிமிஷங்களில் ஜெனரேட்டரிலிருந்து மின் சாரத்துக்கு மாற்றப்பட்டது என்றார் அவர்.

முன்னதாக, கோயிலுக்கு வந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், இணை ஆணையர் க. செல்லத்துரை ஆகியோர் வரவேற்றனர். அப்போது, தமிழக ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர், தமிழக சமூக நலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி, இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாலை 5.35 மணிக்கு கோயிலுக்குள் சென்ற குடியரசு துணைத் தலைவர், மீனாட்சி அம்மன், முக்குறுணி விநாயகர், சுந்தரேசுவரர் உள்ளிட்ட சந்நிதிகளில் வழிபட்ட பின் மாலை 6.30 மணிக்கு வெளியே வந்தார்.

நீதிபதிகளை விமர்சிக்கும் பொதுக்கூட்டம், பேரணிக்கு அனுமதி கூடாது

போலீஸாருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, அக். 30: நீதிமன்ற தீர்ப்புகளை முன்னிறுத்தி நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிக்கும் பொதுக்கூட்டங்கள், பேரணிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என போலீஸாருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆர்.கார்த்திகேயன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், இஸ்லாம் மதத்துக்கு மாறிய ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் என்ற அந்தஸ்தை கோர முடியாது என உயர்நீதிமன்ற மதுரை அமர்வு கடந்த ஜூன் 25-ஆம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவைக் கண்டித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் மாநிலம் முழுவதும் போராட்டங்கள் நடத்தின.

இந்தப் போராட்டங்களின் போது, இந்தத் தீர்ப்பை வழங்கிய அமர்வில் இடம்பெற்றிருந்த நீதிபதி ஒருவருக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் பிரசாரங்கள் செய்யப்பட்டன. நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் அவமதிக்கும் வகையில் பிரசார பொதுக்கூட்டங்கள் நடத்துவதையும், சமூக வலைதளங்களில் பதிவிடுவதையும் தடுக்க வேண்டும்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் குற்ற வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும். போராட்டம் நடத்திய தவ்ஹீத் ஜமாத், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக நிர்வாகிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, காவல் துறை தரப்பில், நீதிபதிகளுக்கு எதிராக தனிநபர் தாக்குதலை சகித்துக் கொள்ள முடியாது. அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

அதற்கு மனுதாரர் தரப்பில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விடியோ காட்சிகளில் முன்னணியில் இடம்பெற்றிருந்தவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், உண்மையான நீதித் துறை சுதந்திரம் என்பது, சட்டம் மற்றும் தகவல்களின் அடிப்படையில் நீதிபதிகள் சுதந்திரமாக முடிவெடுப்பதுதான். நீதித் துறை சுதந்திரம் அரசியல் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. நீதித் துறை முடிவுகளுக்காக நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் அவதூறு செய்வது சட்ட நடைமுறையின் வேரையே பாதிக்கச் செய்யும்.

நீதிமன்ற தீர்ப்புக்கு அதிருப்தி தெரிவிக்க குடிமக்களுக்கு உரிமை இருந்தாலும், நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேச முடியாது. அது பேச்சு சுதந்திர வரம்புக்குள்ளும் வராது. அனைத்து பொது விவாதங்களுக்கும், அமைதியாகக் கூடுவதற்கும் பொத்தாம் பொதுவாக தடை விதித்துவிட முடியாது. நீதித் துறை நேர்மை, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், பொது இடங்களில் பேசுவது, டிஜிட்டல் தளங்களில் அவதூறு கருத்துகளைப் பதிவிடப்படவில்லை என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

நீதித் துறை சார்ந்த முடிவுகளை எதிர்த்து பொதுக்கூட்டங்கள், பேரணி, போராட்டங்கள் நடத்த அனுமதி கோரி அளிக்கும் விண்ணப்பங்களை போலீஸாரும், மாவட்ட நிர்வாகமும் தீவிரமாக ஆய்வு செய்து முடிவெடுக்க வேண்டும். நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் அவதூறாக விமர்சிக்கும் பொதுக்கூட்டங்களோ, பேரணியோ நடத்த எந்த அனுமதியும் போலீஸார் வழங்கக்கூடாது.

நீதிபதிகளுக்கு தனிப்பட்ட முறையில் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் சமூக வலைதளங்களில் பதிவுகள் பதிவிடப்படவில்லை என்பதை உறுதி செய்ய இணைய குற்றப்பிரிவு போலீஸார் தீவிரமாக கண்காணிக்க வேண்டும். சட்டவிரோதமாக செயல்படுபவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நீதிபதிக்கு எதிராக அனுமதியின்றி போராட்டம் நடத்தியது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் புலன் விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும் எனவும், நீதிபதிகள் போலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

விமானக் கட்டணம் பல மடங்கு உயர்வு

சென்னை, அக். 30: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னையிலிருந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் செல்லும் விமானங்களின் கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்துள்ளன.

குறிப்பாக, தீபாவளிக்கு முந்தைய நாள்களில் பயணம் செய்வதற்கான கட்டணங்கள் வழக்கமான விலையைவிடக் கணிசமாக அதிகரித்துள்ளதால் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சென்னையிலிருந்து மதுரை, திருச்சி, கோவை, தூத்துக்குடி உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்லும் விமானங்களின் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. சென்னை – மதுரை வழித்தடத்தில் நவ. 6-ஆம் தேதிக்கான சில விமானங்களில் ரூ.3,129-ஆக இருந்த ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.14,692 முதல் ரூ.16,105 வரை உயர்ந்துள்ளது. நவ. 7-ஆம் தேதிக்கான சில விமானங்களில் ரூ.15,000-க்கும் அதிகமாகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

வழக்கமாக ரூ.3,608-ஆக இருந்த சென்னை – திருச்சி வழித்தடக் கட்டணம் நவ. 6-ஆம் தேதி ரூ.14,778 வரை உயர்த்தப்பட்டுள்ளது. நவ. 7-ஆம் தேதிக்கான சில விமானங்களில் ரூ.10,380 வரை கட்டணமும், ரூ.4,351-ஆக இருந்த சென்னை – கோவை வழித்தடத்துக்கான கட்டணம் நவ. 6-ஆம் தேதி ரூ.5,655, நவ. 7-ஆம் தேதி ரூ.5,200, நவ. 8-ஆம் தேதி ரூ.5,268-ஆக கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை – சேலம் வழித்தடத்துக்கான கட்டணம் நவ. 6-ஆம் தேதிக்கு ரூ.7,598-ஆகவும், நவ. 7-ஆம் தேதிக்கு ரூ.6,233-ஆகவும், சென்னை – தூத்துக்குடி வழித்தடத்திலும் பண்டிகைக் காலப் பயணிகளின் தேவையைப் பொருத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

தவிர, பிற மாநிலங்களுக்குச் செல்லவும் கட்டணம் உயர்வு சென்னையிலிருந்து தில்லி, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்லும் விமானங்களிலும் கட்டண உயர்வு அதிகரித்துள்ளது. வழக்கமாக ரூ.5,933-ஆக இருந்த சென்னை – தில்லிக்கான விமானக் கட்டணம் சில முன்பதிவுத் தளங்களில் ரூ.23,000 முதல் ரூ.30,000-ஆகவும், ரூ.5,293-ஆக இருந்த சென்னை – கொல்கத்தா வழித்தடத்துக்கான கட்டணம் ரூ.22,000 வரையும், ரூ.3,356-ஆக இருந்த சென்னை – மும்பை வழித்தடத்துக்கான கட்டணம் சில விமானங்களில் ரூ.13,000 முதல் ரூ.21,000 வரையிலும், சென்னை – ஹைதராபாத் வழித்தடத்தில் ரூ.15,000-க்கும் அதிகமாகவும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. சென்னை-பெங்களூரு வழித்தடத்தில் நவ. 7-ஆம் தேதிக்கான சில விமானங்களில் ரூ.4,703 முதல் கட்டணம் உயர்ந்துள்ளது.

மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ.16,800 தீபாவளி போனஸ்

சென்னை, அக். 30: தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு அதிகபட்சம் ரூ.16,800 வரை தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை நவ. 4-ஆம் தேதி தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின் உற்பத்திக்கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு 8.33 சதவீதம் மிகை ஊதியமும், 11.67 சதவீதம் கருணைத் தொகையும் என மொத்தம் 20 சதவீதம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, அதிகபட்சமாக ரூ.6,997 மிகை ஊதியமாகவும், ரூ.9,803 கருணைத் தொகையாகவும் வழங்கப்படும். இரண்டும் சேர்த்து அதிகபட்சம் ரூ.16,800 கிடைக்கும். குறைந்தபட்சம் 30 நாள்கள் பணியாற்றிய தகுதியுள்ள தொழிலாளர்கள் இந்தச் சலுகையைப் பெறலாம்.

தமிழக தலைமை தகவல் ஆணையராக எஸ்.நடராஜன் நியமனம்

சென்னை, அக். 30: தமிழக தலைமை தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி எஸ்.நடராஜன் மற்றும் 4 மாநில தகவல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் மாநில தகவல் ஆணையர்களுக்கான காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில், மனிதவள மேலாண்மைத் துறை அரசாணை வெளியிட்டது. அதன்படி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி எஸ்.நடராஜன் மாநில தலைமைத் தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். எஸ்.மகாலட்சுமி, டாக்டர் டி.கே.ஷபீர் (ஓய்வு பெற்ற துணை முதல்வர், சென்னை புதுக் கல்லூரி), சி.மீனா, பி.மகாலிங்கம் (ஊடகவியலாளர்) ஆகிய 4 பேர் மாநில தகவல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 15(3)-இன் கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநில தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் 4 மாநில தகவல் ஆணையர்களும் பதவியேற்கும் நாளில் இருந்து, 3 ஆண்டுகள் அல்லது 65 வயதை அடையும் நாள் வரை பதவியில் இருப்பார்கள். இவற்றில் எது முதலில் வருகிறதோ அதுவே அவர்களின் பதவிக் காலமாக இருக்கும்.

ஐஏஎஸ் அதிகாரியான நடராஜன், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக வரித் துறை முதன்மைச் செயலர் வருவாய் நிர்வாகக் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), அரசுத் துறைகளில் செயலர், பல்வேறு மாவட்டங்களில் ஆட்சியர் என 30 ஆண்டுகளுக்கு மேலான நிர்வாக அனுபவம் கொண்டவர்.

சடார்க் நாக்ரிக் சங்காதன் (எஸ்என்எஸ்) அமைப்பின் 2025–2026 அறிக்கையின்படி, கடந்த ஜூன் 30 நிலவரப்படி தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 37,150 மேல்முறையீடு மற்றும் புகார்கள் நிலுவையில் உள்ளன. ஒரு புதிய ஆர்டிஐ வழக்கு விசாரணைக்கு வரவே ஓராண்டு 7 மாதங்கள் ஆவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

தலைமை தகவல் ஆணையர் மற்றும் 4 தகவல் ஆணையர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளதால் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைந்து முடிக்க முடிக்க வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் ஆர்டிஐ சமூக ஆர்வலர்கள் காத்திருக்கின்றனர்.

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2,000 கனஅடி

பென்னாகரம், அக். 30: ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 2,000 கனஅடியாக நீடிக்கிறது.

காவிரி கரையோர நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவந்த மழை முற்றிலுமாக குறைந்ததாலும், கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டதாலும் காவிரி ஆற்றில் நீர்வரத்து சரிந்து வருகிறது. வெள்ளிக்கிழமை நீர்வரத்து விநாடிக்கு 2,000 கனஅடியாக நீடித்து வருகிறது. ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தின் அளவுகளை தமிழக, கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

கடன் மீட்பு நிர்வாக கிளை (ARMB). எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422 2231314, 0422-2231345. மொபைல் : 9963993409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 26.11.2026 தேதி அன்று
(காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)
முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 26.11.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : கீழே பட்டியலிடப்பட்டுள்ளது. (அவிநாசி சார் பதிவக அலுவலகத்தில், 27.10.2026 தேதியில் பெற்ற ஆன்லைன் வில்லங்கச் சான்றின்படி)
1. ஆவண எண்.10/2025/பிற கடன் உத்தரவுகள்/பதிவு தேதி : 30.10.2025/ வணிக வரி துணை ஆய்வாளரால் செல்வி.K. ஈஸ்வரி–க்கு எதிராக வழங்கப்பட்டது.
2. கோயம்புத்தூர் கடன் மீட்பு தீர்ப்பாயம் வழக்கு எண்கள். OA/394/2025, SA/1296/2025, SA/829/2025, SA/226/2025, SA/1116/2025, SA/748/2026, SA/806/2026
3. SLP 37585/2026.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2) முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
கிளை : திருப்பூர் மெயின் (ID 044900) (தற்போது கோயம்புத்தூர் ARMB-க்கு மாற்றப்பட்டுள்ளது) M/s.கிராண்ட்நியூர் ஃபேஷன் கடன்தாரர் : M/s.கிராண்ட்நியூர் ஃபேஷன், எண்.6, பெரிச்சிப்பாளையம் கிழக்கு KNP காலனி அஞ்சல், தாராபுரம் ரோடு, திருப்பூர் – 641 608 பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் : திரு.J.செந்தில்குமார், த/பெ.திரு. ஜெயச்சந்திரன், எண்.6, ஸ்ரீ பாலாஜி நகர், VKR தோட்டம், அனிதா என்டர்பிரைசஸ் பின்புறம், திருப்பூர் – 641 601 பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர் : திருமதி.K.ஈஸ்வரி, க/பெ.S.கிருஷ்ணகுமார், எண்.1/239, காளம்பாளையம், அய்யன்தோட்டம், பொங்குபாளையம், திருப்பூர் – 641 666	(அட்டவணைச் சொத்து) : S.கிருஷ்ணகுமார் மனைவி திருமதி.K.ஈஸ்வரி பெயரிலுள்ள சொத்து : (PAN : AAMPE0377Q) : திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், அவிநாசி சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலூகா, பொங்குபாளையம் கிராம க.ச.எண்.100/1ல் உள்ள 4.50 ஏக்கர், கிஸ்தி ரூ.3.64 நிலத்திலுட்பட்ட 2.20 ஏக்கர் நிலத்தினுள் மேற்புறம் அடங்கிய 1.20 ஏக்கர், மாமூல் தடவழி உரிமைகளுடன் கூடிய நிலத்தின் எல்லைகள் : சரண்யாவுக்குச் சொந்தமான சொத்துக்குக் கிழக்கு மற்றும் தெற்கு, லட்சுமணனுக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, சிவகாமி மற்றும் கதிரேசன் வகையறாவுக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. இத்துடன் அங்கு கட்டப்பட்டுள்ளதும் கதவு எண்கள் 1/234 A முதல் J முடிய உள்ளவை, அவற்றின் வரிவிதிப்பு எண்கள் 877 முதல் 886 முடிய மற்றும் அவற்றின் பிற அனைத்து இணைப்புகளும் சொத்தைச் சென்று சேரும் மாமூல் தடவழி உரிமைகள் சேர்ந்த சொத்து. தற்போது இச்சொத்து ஆவண எண்.5051/2013ன்படி க.ச.எண்.100/1Aயில் (1.20 ஏக்கர் விஸ்தீரணத்துடன் உள்ளது) இந்த 1.20 ஏக்கர் நிலத்தின் தடவழி உரிமைகள் ஆவண எண்.4818/2017ன் படியானதாகும். அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.172390 N , 77.325970 E	அ) 22.04.2025 ஆ) (i) நடப்பு கணக்கு எண். 0449002100454674 – ரூ.27,814.00, 30.09.2026 தேதி வரை, (01.10.2026 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன்) (ii) டெர்ம் லோன் கணக்கு எண். 044900EG00000096– ரூ.9,32,595.34 – 30.09.2026 தேதி வரை, (01.10.2026 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன்) (iii) பேக்கிங் கிரெடிட் 044900UD00119616 - ரூ.24,00,000.00 (iv) பேக்கிங் கிரெடிட் 044900UD00119759 ரூ.23,00,000.00	1) ரூ.2,75,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து ஐந்து லட்சம் மட்டும்) 2) ரூ.27,50,000/– (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 3) ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 26.11.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

(v) பேக்கிங் கிரெடிட் 044900UD00119847 - ரூ.16,00,000.00, (vi) பேக்கிங் கிரெடிட் 044900UD00120001 - ரூ.3,50,000.00
(vii) பேக்கிங் கிரெடிட் 044900UD00120038 - ரூ.17,00,000.00, (viii) பேக்கிங் கிரெடிட் 044900UD00120144 - ரூ.24,50,000.00
(ix) பேக்கிங் கிரெடிட் 044900UD00120232 - ரூ.27,90,000.00, (x) பேக்கிங் கிரெடிட் 044900UD00120490 - ரூ.5,90,000.00
(xi) பேக்கிங் கிரெடிட் 044900UD00120542 - ரூ.10,00,000.00
அனைத்து பேக்கிங் கிரெடிட் நிலுவைத் தொகை 26.08.2024 தேதி வரை (சேர்க்கப்படவேண்டிய வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளுடன்)
ஆகமொத்தத் தொகை : ரூ.1,61,40,409.34 (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து நானூற்று ஒன்பது மற்றும் பைசா முப்பத்து நான்கு மட்டும்)
இ) 29.09.2025
ஈ) அடையாளம்

மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்
இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் 26.11.2026 (வியாழக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 30.10.2026　　அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர்　　பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

HDB FINANCIAL SERVICES
HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்
[illegible]
கேட்பு (DEMAND) அறிவிப்பு SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ்
[illegible]
1. விண்ணப்பதாரர் & இணை விண்ணப்பதாரர்கள் பெயர்: 1.D.V Alagar Rent, D.V.Alagar Rent, [illegible] தேனி-625531 தமிழ்நாடு, கடன் கணக்கு எண்.59857579, அனுமதிக்கப்பட்ட கடன் தொகை:ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்); கோரிக்கை அறிவிப்பு (Demand Notice) தேதி: 17.10.2026; வாராக்கடன் (NPA) அறிவிப்பு தேதி: 02.10.2026; நிலுவைத் தொகை:ரூ.29,14,394/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து பதினான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)- 12.10.2026
[illegible]
தேதி : 27.10.2026　　ஒப்/- அதிகாரபூர்வ அலுவலர்
இடம் : தேனி　　HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிமிடெட்-க்காக

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
காஞ்சிபுரம் மாநகராட்சி

காஞ்சிபுரம் மாநகராட்சியில் மண்டலம்–IV–க்குட்பட்ட வார்டு எண்.43(ம) 44–ல் அமைந்துள்ள இளங்கோ தெரு (008044R1475), இளங்கோ சாலை1–வது குறுக்கு தெரு (008044R1478), இளங்கோ சாலை 2–வது குறுக்கு தெரு (008044R1476), இளங்கோ குறுக்கு தெரு (008044R1480), இளங்கோ மெயின் குறுக்கு தெரு (008044R1477), சரவணா நகர் (008043R1426), வேதாச்சலம் நகர் 1–வது தெரு(008044R1453), வேதாச்சலம் நகர் 3–வது தெரு (008044R1461), நேதாஜி தெரு (008044R1455), திருவள்ளுவர் தெரு (008044R1474), (ம) எல்லப்பன் நகர் 2–வது குறுக்கு தெரு (008044R1438) ஆகிய பகுதிகளில் சிறப்பு நிதி 2025–26–ன் கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி

மறுமின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
(ந.க.எண். 2106/2025/இ1, நாள்:30.10.2026)

1. காஞ்சிபுரம் மாநகராட்சியில் மண்டலம்–IV–க்குட்பட்ட வார்டு எண்.43(ம) 44–ல் அமைந்துள்ள இளங்கோ தெரு (008044R1475), இளங்கோ சாலை1–வது குறுக்கு தெரு (008044R1478), இளங்கோ சாலை 2–வது குறுக்கு தெரு (008044R1476), இளங்கோ குறுக்கு தெரு (008044R1480), இளங்கோ மெயின் குறுக்கு தெரு (008044R1477), சரவணா நகர் (008043R1426), வேதாச்சலம் நகர் 1–வது தெரு(008044R1453), வேதாச்சலம் நகர் 3–வது தெரு (008044R1461), நேதாஜி தெரு (008044R1455), திருவள்ளுவர் தெரு (008044R1474), (ம) எல்லப்பன் நகர் 2–வது குறுக்கு தெரு (008044R1438) ஆகிய பகுதிகளில் சிறப்பு நிதி 2025–26–ன் கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.
2. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை https://tntenders.gov.in, Corporation Website https://www.tnurbantree.tn.gov.in/kancheepuram/காஞ்சிபுரம் மாநகராட்சி இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in இணைய தள முகவரியில் 02.11.2026 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 06.11.2026 அன்று 11.30AM மணியளவில் காஞ்சிபுரம் மாநகராட்சில் நடைபெறும்.
5. ஒப்பந்தப் புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 20.11.2026 அன்று 03.00PM வரையில்.
6. ஒப்பந்தப்புள்ளி அந்தந்த மாநகராட்சிகளில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 20.11.2026 அன்று 03.30PM மணி.
7. ஒவ்வொரு பணிக்கான மதிப்பீடு, வைப்பு தொகை (Bid Security) – (RTGS/e-BG), ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

செ.ம.தொ.இ/3319/ஒப்பந்தப்புள்ளி/2026　　ஆணையாளர், காஞ்சிபுரம் மாநகராட்சி